# புலிகள்பங்குபற்றுதபேச்சுவார்த்தைபயன்தராது

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 வைகாசி 28 துல்ஹஃ்தா 27 இதழ் 120

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 11-06-1991

[லண்டன்]

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளாதவரையில் எந்த ஒரு பேச்சுவார்த்தையாலோ அல்லது திட்டங்களாலோ பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை. இவ்வாறு பி.பி.ஸி. நேற்றுத் தெரிவித்தது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குப் பல மாதகாலமாகவே முயன்று வருகின்றபோதிலும் இதுவரையில் எந்தவிதக் குறிப்பிடத்தக்க பலன் எதுவும் ஏற்பட்டதாகக் கூறமுடியாது எனவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (க)

## காரைநகரிலிருந்து 3 வயோதிபப் பெண்கள் செ. சங்கத்தினருடன் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கடந்த 9ந் திகதி காரைநகர் சென்று, மூன்று வயோதியப் பெண்களை அழைத்து வந்துள்ளனர்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு: காரைநகர் மாப்பாணபுரியைச் சேர்ந்த திருமதி கனகசபை செளந்தரம்மா (55 வயது), வலந்தலையைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா சின்னத்தம்பி (90 வயது), இவரது மகள் திருமதி தங்கமுத்து (54வயது) ஆகியோரே

(4ம் பக்கம் பார்க்க)

# ★ மக்களின் உணர்ச்சி அலைகளுக்கு மத்தியில் மாமனிதர் தேசிய விருதுகளை பிரபாகரன் நேரில் வழங்கினர்!

(என். கே. துரைசிங்கம், ரி. சிவகணேசன்)

**தமிழீழ மாமனிதர்களுக்கான தமிழீழ தேசிய விருது சாவகச்சேரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் ஆயிரக்கணக்கான மக்களின் கரகோஷத்தின் மத்தியில் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனுல் நேற்று மாலை வழங்கப்பட்டது.**

நேற்று ஐந்தாம் நாளாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் திரு. வே. பிரபாகரன் நேரில் தோன்றி இத்தேசிய விருதுகளை வழங்கினர். கூப்பிய கரங்களுடன் தலைவர் பிரபாகரன் மேடையில் தோன்றியபோது மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய மக்களின் கரகோஷம் வானைப்பிளந்தது.

விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணிச் செயலர் திரு. யோகரத்தினம் யோகி தலைமையில் இவ்விருது வழங்கும் வைபவம் நடைபெற்றது.

[4- ம் பக்கம் பார்க்க]



## போராட்டத்தின் பெரும் சுமையை பொதுமக்களே சுமந்து வருகிறுர்கள்

**- பிரபாகரன்**

(யாழ்ப்பாணம்)

''நீண்ட காலமாகவே போராட்டத்தின் பெரும் சுமையைப் பொதுமக்களே சுமந்துவருகிறுர்கள்.

சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இரத்தமும், கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணுத் துன்பத்தைச் சொற்களில் சித்தரிக்கமுடியாது.''

சாவகச்சேரியில் நேற்று நடைபெற்ற முத்தமிழ் விழாவின் 5ம் நாள் நிகழ்ச்சியில், விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன், மாவீரர் அரங்கில் பொதுமக்கள் முன்னிலையில் ஆற்றிய உரையில் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

உலகின் எல்லா. விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பதுபொதுசனங்களே. ஏனென்ருல், அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிடப் பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்கவேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகிறுர்கள். ஆனுல் இந்த முயற்சிகள் ஒருபொழுதும் வெற்றி அளிப்பதில்லை.

மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிடமுடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது. ஏனென்ருல் விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக, உயிர் மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

சிங்களப் பேரினவாத அடக்குமுறையானது எமது மக்களுக்குச் சாவையும், அழி

(4ம் பக்கம் பார்க்க)

## தலைவர் உயிரோடு இருக்கிறுர் என்பதற்கு முற்றுப்புள்ளி

[யாழ்ப்பாணம்]

தலைவர் பிரபாகரன் உயிரோடு இருக்கிறுரா என்பது பற்றிய வதந்திகள், கேள்விகளுக்கு இன்று ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது என்று விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி செயலாளர்நாயகம் திரு. யோகி தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நேற்று நடைபெற்ற விருது வழங்கும் வைபவத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; பிரபாகரனுக்கும் மாத்தையாவிற்குமிடையில் சண்டை பிரபாகரன் இறந்துவிட்டார் என்றெல்

[4ம் பக்கம் பார்க்க]

## ★ அதிர்ஷ்ட நாள்

(யாழ்ப்பாணம்]

எங்கள் தலைவரை நேரில் பார்க்க கிடைத்த இந்த நாள் ஒரு அதிஷ்டமான நாள் என்று பொதுமக்கள் பலர் தம்மை மறந்த நிலையில் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

[4ம் பக்கம் பார்க்க]

## தேசிய விருது பெற்றேர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாமனிதர்கள் நேற்று இரவு விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனிடமிருந்து தமிழீழ தேசிய விருதைப் பெற்றுக்கொண்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை விவகாரம்: குண்டைவெடிக்கவைத்தவர் பரந்தனைச் சேர்ந்த பெண்?

(சென்னை)

முன்னுள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ததாகக் கூறப்படும் பெண் பரந்தனைச் சேர்ந்த பெண்ணெனச் சந்தேகிக்கப்படுவதாக இந்திய புலனுய்வு துறையினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் இதுவரை அவரது பெயர், விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறதாம்.

இதேவேளை இந்தியாவில் ஆக்ரா நகரில் ஆஸ்பத்திரி ஒன்றில் தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருக்கும் இளம்

[4ம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தவில்லை

**— கருணுநிதி**

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கும் தமக்கும் இடையே எந்த ஒரு இரகசியப்பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை.''

முன்னுள் முதலமைச்சரும் தி. மு. க. தலைவருமான திரு. மு. கருணுநிதி நேற்று முன்தினம் இரவு கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரைநிகழ்த்துகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் பழைய புதிய சினிமாப்பட வீடியோகசெட்டுகள் விற்பனைக்குண்டு. தி.பரமசிவன்பிள்ளை, மூத்ததம்பி வளவு, கரவெட்டி வடக்கு. (சி-4831)

### ஜோதிடம்

ஜாதகங்களிலுள்ள கிரக நிலைகள் சரியில்லாததால் சிங்க ராசித் தலைவர்கள் ராஜீவ் காந்திக்கு உயிராபத்தையும், ஜெயலலிதாவுக்கு முதல்வர் பதவி ஸ்திரமின்மையையும் கொடுக்குமென முன்கூட்டியே வெளியிட்டிருந்தோம். ஜாதகங்களின் கணிப்புகளுக்கும், ஜோதிட நூல் வெளியீடுகளுக்கும்: பேராசிரியர் சத்தியதாஸன் (Mech. Eng , Elec. Eng.), ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன்கேணிச் சந்தி. (4830)

### தவறிவிட்டது

தீவகத்திலிருந்து 27-5-91ல் பண்ணைப்பாதையால் வரும்போது படகில் பிரயாணப் பை ஒன்று தவறிப்போய் விட்டது. அதில் உடுபிடவை முக்கிய ஆவணங்கள் இருப்பதால் தயவு செய்து கண்டெடுத்தவர்கள் அறிவிக்கவும் ம. நடேசன், 383/10 ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (சி- 4835)

### பாலாஜி புத்தகசாலை

பகவான் ஸ்ரீ சாயியுடன் தெய்வீகத்தை நோக்கி, விலை ரூபா 25/- மற்றும் பாடசாலை புத்தக உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள, 27, மின்சாரநிலைய வீதி, 15/6 முதலாம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (ஏ-1368)

## ★ இயற்கை பெரும் சீற்றம்
# அனல் காற்று, அடை மழை இந்தியாவில் 304 பேர் பலி

[புதுடில்லி]

ராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த சிலவாரங்களாக வீசும் கொடூரமான அனல்காற்றால் இதுவரை 192 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தினமும் இவ் அனல் காற்றின் அகோரத்தால் பலியாவோரின் தொகை அதிகரித்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தியாவின் தெற்கு, மேற்கு பகுதிகளில் அடைமழை காரணமாக நடந்த விபத்துக்களில் கடந்த இருநாட்களில் 112பேர் பலியாகியுள்ளனர். [சி]

## உரவகைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

விவசாயத் துறைக்குத் தேவையான உரவகைகள் யாழ். மாவட்டத்திலுள்ள கமநலசேவை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளன.

அமோனியா, பொட்டாஸியம், பொஸ்பரஸ் போன்ற உரவகைகள் 50 கிலோகிறாம் பைக்கட்டுகளாக அடைக்கப்பட்டு விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. (வி)

## நிரந்தர நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மூன்றரை வருடங்களாக அமய அடிப்படையில் கடமையாற்றிய பெண்தொழிலாளர்களில் பதினொரு பேருக்கு சேவை மூப்பு அடிப்படையில் நிரந்தர நியமனம் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. ஆளணி வெற்றிடத்திற்கு இணங்க இவர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. [153]

## ஜாக்பொட் விடுதிகள் மீது மீண்டும் பொலிஸ்முற்றுகை

(கொழும்பு)

கொழும்பு நகரில் மேலும் பல ஜாக்பொட் இயந்திரங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பம்பலப்பிட்டியில் 60 ஜாக்பொட் இயந்திரங்கள், 25 ஹசினோ மேசைகள், 100 ஹசினோ கதிரைகள் பொலிஸாரின் திடீர் முற்றுகையின் போது நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

கொழும்பு கொள்ளுப்பிட்டிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில், பல ஜாக்பொட் இயந்திரங்களுடன், 2 லட்சத்து 39 ஆயிரத்து 146 ரூபாவும், 13 ஆயிரத்து 600 அமெரிக்க டொலர்கள், 2 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்கள், 1 லட்சம் ஹொங்கொங் டொலர்கள், 2 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் ஆகியன பொலிஸாரால கைப்பற்றப்பட்டன.

இவ்வீட்டிலிருந்த ஐந்து தாய்லாந்து வாசிகள் மற்றும் ஒரு பெண் உட்பட இரண்டு மலேசியப் பிரசைகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து ஜாக்பொட் இயந்திரங்களும் புல்டோசர்களினால் சேதப்படுத்தப்பட்டு, தீயிட்டு அழிக்கப்பட்டன.

## இராசி பலன்

11-06-1991

செவ்வாய்க்கிழமை

சதுர்த்தசி மு. இ. 8-54 வரை, கார்த்திகை பி. ப. 1-28 வரை, இராகுகாலம் பகல் 2-52 முதல் 4-22 வரை, சுபநேரம் காலை 10-22 முதல் 11-52 வரை, சித்தமிர்த யோகம், போதாயன அமாவாசை.

மேஷம்- வாக்கு தவறுதல், பணச்செலவு, மனவேற்றுமை.

இடபம்- தொழில் லாபம், குடும்ப வசதி, மனைவி சாதுரியம்.

மிதுனம்- விரக்திநிலை, வைத்தியச் செறவு, அபகீர்த்தி.

கடகம்- வருவாய் அதிகரிப்பு, குடும்ப சுகம், புத்திரர் புகழ்.

சிங்கம்- தொழில்பாராட்டு, அறிஞர் உதவி, உல்லாச பயணம்.

கன்னி- மனக்குறை, தாய்வழிச் செலவு, அலைச்சல் மிகுதி.

துலாம்- உடல் உபாதை, புதிய கவலை, வாழ்க்கைப் பிரச்னை.

விருச்சிகம்- தொழில் நன்மை, எதிர்பாராத உதவி, பொதுத்துறை ஈடுபாடு.

தனுசு- புதிய ஸ்தானம், வாக்கு சலசம், குடும்ப சந்தோசம்.

மகரம்- தனிமை நிலை, தொழில் விரோதம், குடும்ப கவலை

கும்பம்- மனக்கலக்கம், இனசன பகை, காரியதாமதம்.

மீனம்- தொழில் பாராட்டு, புதிய உறவு, தூரத்துசெய்தி.

ஜோஸ்யர்

## கடும் காற்றினால் பிரயாணிகள் அவதி

(யாழ்ப்பாணம்)

தொடர்ந்தும் வீசிக்கொண்டிருக்கும் கடும் காற்றினால் கேரதீவு – சங்குப்பிட்டி ஊடாகப் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

இரும்புக் கம்பியில் ஓடிக்கொண்டிருக்கும் பாதை அடிக்கடி விலகிச் செல்வதாலும் இறங்குதுறையில் கடுமையான அலை மோதுவதாலும் அதிக அளவு மக்கள் பிரயாணம் செய்ய முடியாதுள்ளது.

இரண்டு நாட்கள் வரையும் காத்திருந்துவிட்டு திரும்பும் நிலையும் ஏற்பட்டு வருகிறது.

## தாதிகள் பற்றுக்குறை

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் 150 தாதிகள் பற்றுக்குறை நிலவுகிறது.

பதவி ஆளணியின் பிரகாரம் 400 தாதிகள் கடமையாற்ற வேண்டிய இவ்வைத்தியசாலையில் தற்போது 250 தாதிகள் மட்டுமே சேவையில் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இயங்குப் தாதிகள் பயிற்சி நிலையத்திலும் போதியளவு விரிவுரையாளர்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [153]

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# ராஜீவின் ஜன்பத் பங்களா சாபமிடப்பட்ட வீடாம்?

[புதுடில்லி]

ராஜீவ் குடும்பம் டில்லியில் வசித்துவந்த 10 ஜன்பத்ரோடு பங்களா சாபம்பிடித்தது. என்ற கருத்து எழுந்துள்ளது இந்த பங்களாவை பிடித்த சாபம் இரண்டு பெரும் தலைவர்கள் உட்பட மூன்றுபேரை இதுவரை பழிவாங்கி உள்ளது என்பதில் இக்கருத்து எழுந்திருக்கிறது.

இந்தியாவின் இரண்டாவது பிரதமரான லால்பகதூர் சாஸ்திரி இந்த பங்களாவில் தான் வசித்தார். காஷ்மீர் பிரச்சினை குறித்து 1966-ஆம் ஆண்டு ரஷ்யாவில் தாஷ்கண்ட் என்ற இடத்தில் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. இதற்காக மாஸ்கோ சென்ற பிரதமர் சாஸ்திரி அங்கு மாரடைப்பால் இறந்தார்.

இதற்குப்பின் இந்த பங்களாவில் பல பிரமுகர்கள் குடியேறினர். ஆனால் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளை அடுத்து இந்த வீட்டைக்காலி செய்து விட்டனர்.

பின்பு 1975இல் அவசர நிலை அமுல்படுத்தப்பட்டபின் இந்த பங்களாவை இளைஞர் காங்கிரஸ் ஆக்கிரமித்தது. இந்திரா சாந்தியின் இளைய மகன் சஞ்சய்காந்தி இளைஞர் காங்கிரஸ் தலைவராக அப்போது இருந்தார். அவசரநிலை காலத்தில் இவரதுசெல்வாக்கு கொடிகட்டி பறந்தது. ஆனால் 77ல் ஜனதா ஆட்சி அமைந்தவுடன் இளைஞர் காங்கிரஸ் ராஜ்யம் முடிவுக்கு வந்தது. பின்னர் இவர்கள் இந்த பங்ளாவை காலிசெய்தனர்.

இதற்குமுன் இந்த பங்களா பிரஸ் சவுன்சில் வசம் இருந்தது. அவசரநிலை அறிவிக்கப்பட்டபின் பத்திரிகை சுதந்திரம் புறக்கணிக்கப்பட்டது. இந்த இருண்ட காலத்தில் பிரஸ்கவுண்சிலும் இதை காலி செய்தது. இதற்குப்பின் நீண்ட காலம் இந்த பங்களா காலியாகவே கிடந்தது. இது குறித்து நகர்ப்புற அபிவிருத்தி துறை அமைச்சகமும், இதில் யாரை குடியமர்த்துவது என்று ஆள் தேடிக்கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் தான் இளைஞர் காங்கிரஸ் இதை ஆக்கிரமித்தனர்.

ராஜீவ்காந்தி அமைச்சரவையில் 1985ல் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சராகஇருந்த கே. கே. திவாரி இந்த பங்களாவில் குடியேறினார். பின் 1989 தேர்தலில் பக்சார் லோக்சபா தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த திவாரி இந்த பங்களாவை காலிசெய்யும்படி அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

இவருக்குமுன் பொருளாதாரம் மற்றும் நிர்வாக சீர்திருத்த கமிஷன் தலைவர் எல். கே. ஷா இங்குவசித்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக காலமானார்.

கடந்த 89ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் தோற்றபின் ராஜீவ் பிரதமர் பதவி இழந்தார். இவர் ஏற்கனவேவசித்த ரேஸ்கோஸ்கோர்ட்டில் உள்ள 7ஆவது எண்ணுடைய இல்லம் பிரதமர் அலுவலக இல்லமாக அறிவிக்கப்பட்டது. இதனால் ராஜீவ் காந்தி வீட்டை காலி செய்துவிட்டு 10ஆம் எண்ணுள்ள ஜன்பத் ரோட் பங்களாவுக்கு குடியேறினார்.

தேசிய முன்னணி அரசு இந்த பங்களாவை ராஜீவுக்கு ஒதுக்கியவுடன் காங்கிரஸ் தொண்டர்கள் பலர் அச்சப்பட்டனர். இருப்பினும் பாதுகாப்பிற்கு இது மிகவும் ஏற்றதெனக்கருதி இறுதியில் ராஜீவுக்கே ஒதுக்கப்பட்டது.

சென்னைக்கு அருகே ஸ்ரீபெரம்புதூரில் தேர்தல் பிரசாரத்திற்காக சென்ற ராஜீவ் வெடிகுண்டுக்கு இரையானார்.

இதற்குமுன் பிரதமர் சந்திரசேகர் அரசுக்கு காங்கிரஸ் ஆதரவுகொடுத்தபோது பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை இழந்தது. பா. ஜ க. தலைவர் அத்வானி பிரதான எதிர்க்கட்சித் தலைவரானார். அவருக்கு இந்த ஜன்பத் பங்களா ஒதுக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர்களின் அலுவலகஇல்லமாக இது அறிவிக்கப்பட்டது.

இருப்பினும் ராஜீவ் காந்திக்கு விசேஷ பாதுகாப்புக் கொடுக்க வேண்டியிருப்பதால் இந்த பங்களாவே மிகவும் ஏற்றதென கருதப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கலந்துரையாடல்

(யரழ்ப்பாணம்)

வலிகாமம் - வடக்கிலிருந்து பெரும்பான்மையான மக்கள் வெளியேறி ஓராண்டு ஆகின்ற நேரத்திலே, அங்கிருந்த பொதுஸ்தாபனப் பிரதிநிதிகள் பொதுநலன் விரும்பிகள் வலி–வடக்கு புனர்வாழ்வுக் கழகம் என்றதோர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர்,

இவ்வமைப்பின் நிர்வாகக்குழு கடந்த வாரம் கூடி இடம்பெயர்ந்த மக்களின் எதிர்காலம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக முடிவு செய்ய நாளை 12ம் திகதி புதன்கிழமைமாலை மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் ஓர் கலந்துரையாடலை ஒழுங்கு செய்துள்ளார்கள் இக்கலந்துரையாடலில் வலிவடக்கில் உள்ள அரசநிறுவனங்கள், பொதுஸ்தாபனங்கள், சமய நிறுவனங்கள், பாடசாலைகள், தொழிற் சங்கங்கள், கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும்படி வலி - வடக்கு புனர்வாழ்வுக் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.


## நிருபர்கள் தேவை

### செய்தித்தகவல் மையம்

செய்தித்தகவல் மையம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவை அலுவலர் பிரிவுகள் தோறும் நிருபர்களை நியமனம் செய்து வருகின்றது.

க. பொ. த சா/த அல்லது உ/த சித்தியடைந்த அல்லது அதற்கு சமமான அல்லது உயர்தகைமையுடைய செய்தி சேகரிக்கும் ஆற்றலும் எழுத்தாற்றலும் கொண்டவர்கள் விரும்பத்தக்கது. நிருபர்களுக்கு போக்குவரத்துச் செலவுவுட்பட செய்தி தகவல்களுக்கான பணம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் தத்தமது பகுதிக் கிராமசேவை அலுவலரிடம் இருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முக்கிய குறிப்பு:

பொதுமக்கள் தமது பிரச்சனைகள், பாதிப்புக்கள் குறித்து எழுத்துமூலம் நேரில் சமர்ப்பிக்கலாம்.

நிர்வாகி

செய்தித் தகவல் மையம்

கோப்பாய்.

(சி 4836)

# "உலகில் வாழும் 7 கோடி தமிழரும் தலைவர் பிரபாகரனை மிகவும் உயர்வாக போற்றுகின்றனர்"

- கவிஞர் வாஞ்சிநாதன்

(யாழ்ப்பாணம்)

உலகில் வாழ்கின்ற சுமார் 7 கோடி, தமிழர்களும் ஈழத்திலே விடுதலைக்காக நிமிர்ந்து நின்று போராடுகின்ற நமது தலைவர் பிரபாகரனை மிக உயர்வாக எண்ணுகின்றனர்; போற்றுகின்றனர்.

சாவகச்சேரி சிவன்கோவில் மைதான மாவீரர் அரங்கில் நடந்த நான்காம் நாள் முத்தமிழ்விழா நிகழ்ச்சியில் பேசிய கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

''இன்றைய காலகட்டம் எமது போராட்டத்தின் இறுதி நிலை என்று கூடச்சொல்லலாம் தலைவர் பிரபாகரனும், தமிழீழ விடுதலைப் புலிகளும் அடைந்த துன்பங்களும் துயரங்களும் சொல்ல முடியாது.

உலகமே புகழ்கின்ற இந்தத் தலைவனின் காலத்தில் இந்த விடுதலை இயக்கத்தின் காலத்தில் நாம் போராடமுன்வரா விட்டால் நாம் என்றுமே இழந்துபோன நமது மண்ணை மீட்கமுடியால் போய்விடும்.''

''அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என்று அன்று பாரதி சுதந்திரக் கனலை மூட்டினான். ஆனால் பாரதியின் போராட்ட காலத்தில் 'ஷெல்லடி', 'பொம்பர் அடி'' ''ஹெலி அடி'', இல்லை பாரதி காலத்தில் பசிலனும் இருக்கவில்லை. அதனால்தான் பாரதி இவைகளைப்பற்றி எழுதாமல் வானம் இடிந்துவிழுந்தாலும் அச்சமில்லை என்று மட்டும் எழுதினான் ஆனால் அதே பாரதி இன்று இந்த யாழ்ப்பாண மண்ணில் இருந்திருந்தால் ''அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே உச்சிமீது பொம்பர் வந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்று நிச்சயமாகப் பாடியிருப்பான் என்றார்.

## முத்தமிழ் விழா ஏற்பாடு: நெல்லியடி வீதிகள் சிரமதான மூலம் துப்பரவு

(பருத்தித்துறை)

நெல்லியடியில் நடைபெறும் முத்தமிழ்விழாவையொட்டி நெல்லியடிப்பிரதேசத்தில் உள்ள நெடுஞ்சாலைவீதிகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களும், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்க ஊழியர்களும் சிரமதானமுறையில் துப்பரவு செய்துள்ளனர்.

மாலிசந்தியிலிருந்து உடுப்பிட்டிவரையான நெடுஞ்சாலை வீதியை புலோலி, பருத்தித்துறை, உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கங்களின் ஊழியர்களும் பருத்திதுறை தெ. ப. உ வி. கூ. சங்க ஊழியர்களும் சிரமதானமுறையில் துப்பரவு செய்துள்ளனர். மாலிசந்தியிலிருந்து மூத்தனார் கோயில்வரையான நெடுஞ்சாலை வீதியை கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க ஊழியர்களும், கட்டைவேலி, நெல்லியடி தெ. ப. உ. வி. கூ. சங்க ஊழியர்களும் சிரமதானமுறையில் துப்பரவு செய்துள்ளனர்.

இப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களும், தெ ப. உ. வி. கூ சங்கங்களும் இணைந்து முத்தமிழ்விழாவில் கலந்து கொள்ளும் மக்களின் நன்மை கருதி மாலிசந்தி, நெல்லியடிச் சந்தி, நாவலர்மடச்சந்திகளில் தணணீர்ப்பந்தல்களை அமைத்துள்ளனர். (52)

## தமிழ் அன்னையின் பதமலரைத் தினம் சூடு

ராகம்: தேஷ் தாளம்; ஆதி

பல்லவி

அன்னையின் அரும்புகழைத் தினம்பாடு - தமிழ்
அன்னையின் பதமலரைத் தினம் சூடு - எங்கள்
... (அன்...)

அனுபல்லவி

முக்கண்ணன் அகத்தியர்க்கு அருளிடவே – வேல்
முருகனின் அருள்மடியிற் தவழ்ந்தவளாம் - உயிர்
... (அன்...)

சரணங்கள்

முச்சங்கத் தரியணையில் வீற்றிருந்தாள் - தமிழ்
முடியுடை மூவேந்தர் பணிந்துநின்றார் – கோடி
அறிஞர்கள் அணிசூட்டி மகிழ்ந்துநின்றார் – முழு
அகிலமும் அவளழகில் மயங்கிநின்றார் - அந்த
... (அன்...)

கையிலையிற் பிறந்தவள்தான் எமதன்னை – தென்
பொதிகையில் வளர்ந்தவள்தான் தமிழன்னை - ஓடும்
வைகையில் எதிர்நின்றாள் எங்களன்னை - கொடும்
நெருப்பிலும் எதிர்நின்றாள் எங்களன்னை - அந்த
... (அன்...)

அன்னையின் மணிவயிற்றில் மலையாளம் – மற்றும்
கன்னடம் துளுதெலுங்கும் உதித்தனவாம் - இன்னும்
பன்மொழிக்கு மன்னையாய் விளங்குகின்றாள் - அவள்
கன்னியாய் என்றென்றும் துலங்குகின்றாள் - அந்த
... (அன்...)

கரங்களில் வளையல்கள் தரித்திருப்பாள் - இரு
காதிலும் குண்டலங்க ளணிந்திருப்பாள் - நூல்
இடையினில் மேகலை இணைந்திருப்பாள் - பொற்
பதங்களில் சிலம்புகள் பூண்டிருப்பாள் - அந்த
... (அன்...)

உயர்கலை பலகோடி கொண்டஅன்னை - மண்ணில்
உயர்நீதி நெறிமுறைகள் புகன்றஅன்னை - யாரும்
புகலரும் தமிழ்வீரம் கொண்டஅன்னை - என்றும்
புகலரும் மெஞ்ஞானம் பகர்ந்தஅன்னை - அந்த
... (அன்...)

அன்னையின் எழில்கண்டு வேற்றவரும் - இன்றும்
அன்னையின் பணிசெய்ய முந்துகின்றார் - எங்கள்
அன்னையின் அழகுக்கோர் இணையுமில்லை - தமிழ்
அன்னையின் அழகுரைக்க மொழியுமில்லை – அந்த
... (அன்...)

அன்னையின் ஒருவிழியே இயற்கலையாம் - எங்கள்
அன்னையின் நுதல்விழியே இசைக்கலையாம் – உயிர்
அன்னையின் மறுவிழியே நாடகமாம் - எங்கும்
அன்னையின் அழகொளிரும் நர்த்தனமாம் – அந்த
... (அன்...)

புவியெங்கும் தமிழோசை ஒலித்திடவே - இந்தப்
புவியெங்கும் தமிழ்க்கலைகள் செழித்திடவே – என்றும்
உலகெங்கும் தமிழாட்சி நிலைத்திடவே - எங்கள்
உயிர்தந்தும் தமிழ்த்தொண்டு இயற்றிடவே – அந்த
... (அன்...)

"முருகு"

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும் முத்தமிழ் விழா 6-ம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: நெல்லியடி
'மாவீரர் கலையரங்கம்'

நாள்: 11-06-1991 செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 5-30 மணி

மங்கள இசை

நாதஸ்வரம்;-
காரைநகர் திரு. என். கே. சணேசன்
திரு. ஆர். சண்முகதாஸ்
தவில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் திறப்புரை
சிறப்புரை:-
பேராசிரியர் துரைராஜா அவர்கள்
[துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்]

கவியரங்கம்
பொருள்: கேள்வி பதில்
தலைமை: காரை செ. சுந்தரம்பிள்ளை

கேள்வி — பதில்

கவிஞர்கள்:
ஜெ ஜெயசீலன், நாக. சிவசிதம்பரம். — கல்வயல் வே. குமாரசாமி, சா. வே. பஞ்சாட்சரம்

குழுப்பாடல்
இராமநாதன் நுண்கலைப்பிரிவினர் வழங்கும்
'வாத்ய ப்ருந்தா'

மீசாலை கலை பண்பாட்டுக் குழுவினரின்
'விடிவை நோக்கி' நாட்டிய நாடகம்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின்
போர்க்காலப் பாடல்கள்
மெல்லிசை நிகழ்வு

## வடமராட்சி வீதிகளில் அலங்கார வளைவுகள்

(பருத்தித்துறை)

விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகத்தினரின் முத்தமிழ்விழாவையொட்டி வடமராட்சிப்பகுதியில் இன்று 11ம் தேதியும், நாளை 12-ம் தேதியும் நடைபெறவுள்ள விழாக்களுக்கான ஏற்பாடுகள் மிகத் துரிதமாக நடைபெற்று முடிவடைந்துள்ளன. இவ் விழாக்கள் நெல்லியடிமத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற விருப்பதால் நெல்லியடி பிரதேசம் விழாக்கோலம் பூண்டுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில்

(4ம் பக்கம் பார்க்க]

## "நல்லூர் அரசு காலத்தில் தமிழ் சிறப்புற்றிருந்தது"

- பேராசிரியர் சிற்றம்பலம்

(யாழ்ப்பாணம்)

''ஈழத்திலே ஆதிகாலம் முதல் தமிழ்மொழி போற்றப்பட்டு வந்தது. சுமார் 2000 ஆண்டுகளுக்குமுன் பழமை வாய்ந்த மொழியாக தமிழ் இருந்து வந்துள்ளது. திருமலை, அம்பாறை, அனுராதபுரம் பகுதிகளில் காணப்படுகின்ற கல்வெட்டுகள் இதற்கு சான்றாக உள்ளது.''

சாவகச்சேரியில் நடந்த முத்தமிழ்விழா நான்காம்நாள் நிகழ்ச்சியில் பேசுகையில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தமிழ் ஏனைய இடங்களிலும் வளர்ச்சியடைந்து இருந்ததற்கு இலக்கியங்கள் ஆதாரமாக உள்ளது.

வடமொழியான பாளி, சமஸ்கிருதம் மொழிகளுடன் கூட தமிழ்மொழியும் பயிற்றப்பட்டுள்ளது.

கோட்டை 'ராஜ்யத்தில்கூட தமிழ் இடம்பெற்றதாக சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன.

கி. மு. தமிழ்மொழியினை எப்படிப் போற்றினார்கள் என்பதனை ஆசியாப் பகுதிகளில் உள்ள பௌத்த நூல்கள் மட்டுமல்ல தமிழ் நூல்களே எடுத்துக் காட்டுகின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை தமிழைப்பற்றிக் கூறுகின்றன தென்இந்தியாவிலும் தமிழ் வாழ்ந்ததாகவும் இலக்கியம் கூறுகிறது நல்லூரைத் தலைநகராக ஆண்' மன்னனின் காலம் 4-வது கடைச்சங்கம்எனலாம். முதல் மூன்றுசங்கங்களும் தமிழைவளர்த்தது தமிழ் நட்டிலேயே நல்லூர் அரசு அக்காலகட்டத்தில் தமிழ்மொழி திறமை பெற்றிருந்தது வெளிநாட்டுப் யாத்திரிகர்களும் தமிழில் புலமையை எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

இந்தநூற்றாண்டில் மொழிப்பிரச்சினை தமிழ்மக்கள் மத்தியில்ஏற்படலாயின தமிழர்கள் மத்தியில் சிங்கள மொழித் திணிப்பை ஏற்படுத்தினார்கள் சிங்களவர்கள். இதன் மூலமே தமிழர்போராட்டமும் ஆரம்பமாகின.

பல்வேறு எதிர்பார்ப்புகளை எதிர்பார்க்கும் விழாவாக இது அமையவேண்டும். கலைகளை ஊக்குவிக்கின்ற விழா தமிழ்க்கலைகளை ஏற்றுகின்ற விழாவாக மாற்றவேண்டும்.

தமிழை சரியாக ஒவ்வொரு நிலையிலும் உயர்த்துவதுதான் தமிழுக்குசெய்யும்பணி. தமிழ் பதங்களை கண்டுபிடிக்கவேண்டும் சொந்தமாக கலைச்சொற்களை நாம் உருவாக்கவேண்டும் அப்படியானதொரு காலகட்டத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள மொழியாகவளரும் (56)

## துப்பளைப்பாய் புனித அந்தோனியார் வருடாந் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தும்பளைப்பாய் புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி 13ம் திகதி முடிவடைகின்றன.

இறுதிநாள் அன்று பாடற்பூசையும், திருச்சுருப பவனியும் இடம்பெறும். மாலை அன்னதானமும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது. (வி)

# போராட்டத்தின் பெரும்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

வையும், தாங்கொணுத் துயரையும் கொடுத்தபோதும் என்றுமில்லாதவகையில் தேசியப்பற்றுணர்வையும், சுதந்திரத் தாகத்தையும் தூண்டிவிட்டிருக்கிறது. தமிழரின் தேசிய ஆன்மாவை விழித்தெழச் செய்திருக்கிறது.

இன்று நாம் கொண்டாடிவரும் இந்த முத்தமிழ் விழா எமது மக்களின் தேசிய எழுச்சியின் அபாரமான வெளிப்பாடு என்றே சொல்லவேண்டும். போராட்டச் சூழலில், எல்லைகளில் எதிரியின் போர் முரசு கேட்கும் யுத்தகாலத்தில், சமுத்திரம் போல் திரண்டு வந்து பல்லாயிரம் மக்கள் முத்தமிழ் விழாவில் பங்குகொள்கிறார்கள் என்றால் அது எமது மக்களின் திடசங்கற்பத்தை, உறுதிப்பாட்டை, சுதந்திர அறைகூவலைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

நான் இன்று இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய நிகழ்வில் நேரடியாகப் பங்குகொள்வதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தமிழீழ மண்ணின் விடிவிற்காக, தமிழீழ மக்களின் விமோசனத்திற்காக, தமிழீழ தேசிய பண்பாட்டின் மறுமலர்ச்சிக்காக உழைத்தோரும், உழைத்து வருபவர்களுமான உன்னத மனிதர்களை, உண்மையான மண்ணின் மைந்தர்களை மதிப்பளித்துக் கௌரவிப்பதற்கு எனக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்தலதயிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

நற்பணியாற்றும் நல்ல மனிதர்களுக்கு மதிப்பளிப்பதும் கௌரவம் செலுத்துவதும் தமிழரின் பண்பாடு. இந்த சீரிய மரபுக்கு ஏற்ப, இந்தச் சிறப்பு வைபவத்தை ஒழுங்கு செய்த எமது இயக்கத்தின் கலை பண்பாட்டுக் கழகத்தினருக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழீழ தேசத்தின் அதியுயர்ந்த கௌரவமாக தேசிய விருது வழங்கி இங்கு கௌரவிக்கப்படுபவர்களை நாம் மாமனிதர்கள் என மதிப்பளிக்கிறோம், ஏனென்றால் இவர்கள் அனைவரும் அற்புதமான இலட்சியவாதிகள். இனப்பற்றும் நாட்டுப்பற்றும் உடைய தேசாபிமானிகள். சுயநல வாழ்வின் குறுகிய வட்டத்திற்கு அப்பால் நின்று, சமூக நலத்திற்காக சேவையாற்றிய அபூர்வ மனிதர்கள், இவர்களது அறிவாற்றல், படைப்பாற்றல், செயலாற்றல் அனைத்துமே தமிழீழ சமூகத்தின் மேன்மைக்கு உரமூட்டுவதாக அமைந்திருக்கிறது. இவர்களது பணி மேலும் தொடரவேண்டும். இவர்களது தொண்டு மேலும் சிறக்க வேண்டும். இதனால் தான் இவர்களுக்கு பெரும் மதிப்பளித்து தேசிய விருது வழங்கி கௌரவிக்கத் தீர்மானித்தோம்.

இந்தக் கௌரவப் பரிசளிப்பை தேசிய விருது என நாம் அழைப்பதில் அர்த்தமும் முக்கியத்துவமும் இருக்கத்தான் செய்கிறது.

தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசிய கட்டமைப்பைக் கொண்டவர்கள்.

வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசியமாக வாழ்ந்து வந்தோம், தேசியமாகவே வாழ்ந்து வருகிறோம். தேசியமாகவே வாழப்போகிறோம்.

எமது தேசியத்தை எதிரியானவன் ஏற்றுக் கொண்டாலும்சரி ஏற்றுக்கொள்ள மறுத்தாலும்சரி எமது தேசிய தனித்துவமானது என்றும அழிக்கமுடியாத எதார்த்தமான அரசியல் உண்மை என்பதை நாம் உலகிற்கு சதா பிரகடனம் செய்துகொண்டே இருப்போம். தேசிய விருது என நாம் பட்டமளிப்பதும் இப்படியான ஒரு பிரகடனமே.

பிரத்தியேக தேசியத் தொண்டு ஆற்றிய சிலருக்கு இன்று தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கிறோம். ஆண்டுதோறும், முத்தமிழ் விழாவின் முக்கிய நிகழ்வாக இந்ததேசிய பரிசளிப்பு வைபவம் இடம்பெறும் ஆண்டுதோறும் மாமனிதர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள். இந்தத் தேசிய விருது அளிப்பிற்கு ஒரு சில தேசபக்தர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் ஒட்டுமொத்தத்தில் இந்தப் பரிசளிப்பு எமது மக்கள் அனைவருக்கும் வழங்கப்படும் கௌரவமாகவே கருதப்படவேண்டும்.

எமது மக்கள் போற்றப்படவேண்டியவர்கள். கௌரவிக்கப்படவேண்டியவர்கள். தேசிய போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்று தான் சொல்வேன். இலைமறைகாயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு தோள் கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள்என்று தான்அழைக்கவேண்டும்.

இந்த சுதந்திர அறைகூவல் எமது எதிரியின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை. சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும், அசட்டை செய்யமுடியாது.

இலட்சியத்தால் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

இந்த வரலாற்றின் படைப்பாக, எமது தேசிய மண், ஒரு சுதந்திர பூமியாக பிறப்பெடுக்கும் எண்பது திண்ணம்.

## மரண அறிவித்தல்

### காசிநாதர் சோதிநாதன்

காரைநகர் சருங்காலியைச் சேர்ந்த காசிநாதர் ஆச்சிமுத்துவின் மகன் சோதிநாதன் காரைநகரில் 8-6-91 சனிக்கிழமை காலமானுர். இவர் சண்முகநாதன், தெய்வேந்திரம் மயில்வாகனம் (நுவரேலியா) கணேசபிள்ளை, ராசேஸ்வரி, சரோசினிதேவி, கமலாதேவி ஆகியோரின் சகோதரனும், தங்கவேலு செல்வரத்தினம், புவீந்திரன் (வவுனியா), மோகனராணி, ஆனந்தராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். தயவுசெய்து இத்துயர அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்: கா. க. கணேசபிள்ளை
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்.

(சி-4838)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63.ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence Number B/100086/81g

# நெல்லியடி விழாக்கோலம்

[நெல்லியடி]

நெல்லியடியில் இன்று ஆரம்பமாகும் முத்தமிழ் விழாவையொட்டி நெல்லியடிப்பட்டினம் விழாக்கோலம் பூண்டுள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் அரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை மங்கள இசையுடன் ஆரம்பமாகிறது.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் மூன்றும் கட்டமாக இன்று நெல்லியடியில் விழா ஆரம்பமாகிறது.

விழா நடைபெறும் நெல்லியடிப் பட்டினத்தைச் சுற்றியுள்ள 6 பிரதான வீதிகளிலும்தமிழ் ஈழப்போராட்ட வரலாற்றையும் இசை எழுச்சியையும் எடுத்துக்கூறும் ஓவியங்களுடன் கூடிய அலங்கார வளைவுகள் பெரும் எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளதோடு சிவப்பு, மஞ்சள் கொடிகளும் பெருந்தொகையாகப் பறக்கவிடப்பட்டுள்ளது அரங்க முன்றலிலும் சிவப்பு மஞ்சள் கொடிகளுடன் வர்ணமலர் மாலைகள் பிரதான வீதி வரை கட்டப்பட்டுள்ளன.

இவ்விழாவையொட்டி நெல்லியடி பட்டினத்திலுள்ள சகல கடைகளும் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இதுதவிர வடமராட்சிப் பகுதியில் ஏனைய இடங்களிலும் அலங்கார வளைவுகளும் அமைக்கப்படுள்ளதோடு சிவப்பு,மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன வர்த்தக நிலையங்களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. (61)

## காரைநகரிலிருந்து

[1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களாவர்.

இந்த மூவரும், தாங்கள் குடியிருந்த இடங்களில் எதுவித உதவிகளும், பராமரிப்புமின்றி வாழ்ந்ததாகவும், சரியான உணவு வகைளை உண்ண முடியாத நிலையில் இருந்ததாகவும் தெரிவித்தனர்.

திருமதி தங்கமுத்து அங்கு நடைபெற்ற சம்பவங்களின் அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாமல் இருக்கிறார்.

இவர்கள் தெரிவித்த தகவல்களின்படி ஐம்பதுக்கும் மேற்பட்டோர் சடந்த ஏப்ரல் மாதம் 24, 25ம் திகதிகளில் நடந்த இராணுவ நடவடிக்கையின் போது உயிரிழந்தும் பலர் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுமுள்ளனர். [56]

## மக்களின்

(1ம் பக்கத் தொட ச்சி)

விருது வழங்குவதற்கு முன்னர் இரவு 8-23 மணியளவில் திரு பிரபாகரன் உரையாற்றினுர்.

இதையடுத்து மாமனிதர்களுக்கான விருதை அவர் வழங்கினுர். விருது வழங்கும் நிகழ்ச்சி சுமார் 10 நிமிடங்கள் இடம்பெற்றது. சரியாக 8-39 மணியளவில் கூடியிருந்த அனைத்து மக்களுக்கும் திரு. பிரபாகரன் கைகூப்பி வணக்கத்தை தெரிவித்து விடைபெற்றார்.

இவ்விருது வழங்கும் நிகழ்ச்சியில் திரு பிரபாகரனுடன் திரு மாத்தயா, திரு. அன்ரன்பாலசிங்கம், திரு. யோகி, திரு. பாலகுமார், திரு.பேபி சுப்பிரமணியம், திரு. தேவர், திரு. புதுவை இரத்தினதுரையும் மேடையில் உடனிருந்தனர். [சி-ரி]

## புலிகளுடன்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் மேலும் தெரிவிக்கையில்; தி. மு. க வையும் ராஜீவ் காந்தி படுகொலையையும் இணைத்து காங்கிரஸ் கட்சியாரும், அ. தி. மு. க, அணியாரும் அரசியல் ஆதாயம் தேடப்பார்க்கிறார்கள் என்றும் அவர் குற்றம் சாட்டினுர்,

விடுதலைப் புலிகளுக்கும் கருணுநிதிக்கு மிடையில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகசட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்ரமணியம் சுவாமி குற்றஞ்சுமத்தியதை அடுத்தே திரு. கருணுநிதி இவ்வாறு மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் தமிழ்நாடு காங்கிரஸ் (ஐ) கட்சித்தலைவர் திரு கே. வாழப்பாடி ராமமூர்த்தி தி. மு கழகம் தேர்தலில் வன்முறையை கடைப்பிடிக்குமென்றும் அதனை அரசு தடுக்க வேண்டுமென்றும், வன்முறையை தூண்டும் வகையில் தி.மு.க தலைவர் கருணுநிதி மேடைகளில் பேசிவருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார். (க)

# ஆனையிறவில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்]

ஆனையிறவு இராணுவ முகாமை அண்டியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் 3 குண்டு வீச்சுவிமானங்கள் மாலை 4-00 மணி முதல் 4-45 வரை 6 தடவைகள் குண்டுகளை வீசியுள்ளன.

இத்தாக்குதலை தொடர்ந்து முகாமில் தங்கியுள்ள இராணுவத்தினர் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலையும் துப்பாக்கிப்பிரயோக தாக்குதலையும் நடாத்தினர்.

நேற்று முன்தினம் மாலை 6-00 மணிமுதல் நேற்று அதிகாலை 6-00 மணிவரை இத் தாக்குதல் நடத்தப்பட்டன.

சேதவிபரங்கள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (க]

# பஞ்சாப்பில் 9 வேட்பாளர் உண்ணுவிரதம்

[சண்டிகார்]

பஞ்சாப்பில் தேர்தலில் போட்டியிடும் 9 வேட்பாளர்கள் சாகும்வரை உண்ணுவிரதம் இருக்கப் போவதாக இந்திய அரசாங்கத்தை மிரட்டியுள்ளார்கள்.

தற்பொழுது பொலிஸ் காவலில் உள்ள இவர்கள் தமது தேர்தல் பிரசார செலவுகளை அரசு உடனடியாக தர வேண்டும் என்றும் கோரிக்கை விட்டுள்ளனர். (க)

## அதிர்ஷ்டநாள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் பிரபாகரனை சாவகச்சேரியில் நேற்று நேரில் பார்த்த பொது மக்களே இவ்வாறு மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டார்கள்.

தலைவரை நேரில் பார்த்தாச்சு இனிமேல் சாகலாம் என்று கூட பலர் தெரிவித்தனர்.

தலைவர் பிரபாகரன் விழாவிற்கு வந்து விட்டார் என்பதனை கேள்வியுற்ற மக்கள் பலர் முண்டியடித்துக் கொண்டு சாவகச்சேரி நோக்கி படையெடுக்கத் தொடங்கினுர்கள். [ரி)

## ராஜீவ்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

பெண் மீதும் சந்தேகிக்கப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளளர்.

இதேநேரத்தில் ராஜீவ் கொலையுடன் நெருங்கிய தொடர்புடையவராக சந்தேகிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளரான மதிமகன் தாம் தேடப்பட்ட நபர் அல்ல என்பதை நிருபித்துள்ளாராம்.

காஞ்சிபுரத்தில் படித்தாலும் தேடப்படும் நபர் தானில்லையென்பதை இவர் கொழும்பில் தங்கியுள்ள இந்திய புலனாய்வுத்துறை அதிகாரியிடம் நிருபித்துள்ளார்.

இதே போன்றே அண்மையில் ராஜீவை குண்டுவெடிக்க வைத்து கொன்றதாக வவுனியாப் பெண் ஒருவர் சந்தேகிக்கப்பட்டு பின் அங்கு போய்ப் பார்த்தபோது அந்தப்பெண் உயிரோடிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

## வடமராட்சி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விழாக்களுக்கான அரங்கு மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியின் முக்கிய இடங்கள் வீதிகள், சந்திகளில் தமிழ் கலை பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. சிவப்பு, மஞ்சள் நிறக்கொடிகளும் புலிக்கொடிகளும் பல இடங்களில் பறக்கவிடப்பட்டுள்ளன. (52)

# இராணுவம் புதிய இடத்தில்

(யாழ்ப்பாணம்]

மன்னார் மாவட்டத்திலுள்ள சிலாவத்துறை, நானாட்டான் முகாம்களிலிருந்து நேற்று முன்தினம் இரவு வெளியேறிய இராணுவத்தினர் கடற்கரை பக்கமாக முன்னேறி அரிப்பு என்ற இடத்தில் நிலைகொண்டுள்ளனர். (க]

# விடைத்தாள்கள் கொழும்பு அனுப்பப்பட்டன

[யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தர விசேட பரீட்சை (1990) விடைத்தாள்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தரை மார்க்கமாக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (152)

## தலைவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் சந்தேகம் பலருக்கு இருந்தது. இது உண்மை என்றும் பலர் நம்பினுர்கள்; ஆனுல் விடுதலைப்புலிகள் ஒரு குடும்பம் என்பதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்; சாதாரண குடும்பத்தைவிட எங்களின் குடும்பம் வேறுபட்டது. எமது குடும்பத்தில் இந்தமண்ணுக் ாக மக்களுக்காக உயிரைத் தரக்கூடிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலிகள் தயாராக இருக்கிறார்கள். ஒரு சிறந்த தலைவன் எமது குடும்பத்தில் இருக்கிறார் என்றார். [ரி]

## தேசிய விருது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விருதில் தங்கப்பதக்கமும், பணமுடிச்சும், சான்றிதழ்பத்திரமும் அடங்கியிருந்தது. மாமமனிதர்களை திரு. யோகி அழைக்க அவர்கள் சார்பாகவும், அவர்களும் விருதினை பெற்றார்கள்.

இவ் விருதினை பெற்றோர் விபரம்: காசிஆனந்தன் அவர் சார்பாக திரு. தேவர் பெற்றார்) சிவானந்தசுந்தரம் (அவரது தமக்கையார் பெற்றார் அருணுசலம் மகன் பெற்றார்) இராசரத்தினம் மனைவி பெற்றார் நடராசா (மகன் பெற்றார் சிவஞானசுந்தரம் சிரித்திரன் நோய்வாய்ப்பட்ட நிலையிலும் இவர் மேடைக்கு வந்திருந்தார் திரு பிரபாகரன் அவரிடம் சென்று விருதை வழங்கினுர். திருநாவுக்கரசு, கலைஞானி ஆகியோர் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். (சி]